# யார் மனதில் யார் இருப்பார்..!

## சந்திரவதனா



# யார் மனதில் யார் இருப்பார்..!

## சந்திரவதனா

அபுனைவு

மனஓசை

# Yaar Manathil Yaar Iruppar..!

## Non-fiction short Stories

**Author:Chandravathanaa Selvakumaran**

eBook : November 2024

Language: Tamil
© November 2024 Manaosai, Germany
© Chandravathanaa Selvakumaran

Compilation: Manaosai
Published by Manaosai, Germany



*சந்திரவதனா (1959) ஈழத்தில் மேலைப்புலோலியூர், ஆத்தியடி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் 1986 இலிருந்து தனது குடும்பத்துடன் ஜெர்மனியில் வாழ்ந்து வருகிறார்.*

*1975 இலிருந்து எழுதிக் கொண்டிருக்கும் இவரது பன்முகப்பட்ட படைப்புகள் வானொலிகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணைய இதழ்கள் எனப் பல தளங்களிலும் வெளிவந்திருக்கின்றன.*

## உள்ளடக்கம்


1. அவன் ........................................................ 06
2. இரயில் பயணங்களில் ...................................... 11
3. தடம்பதித்தவர்கள் ........................................ 15
4. இதில் நியாயங்கள் யார் சொல்லக் கூடும்? .... 20
5. காதல் ஒரு போர் போன்றது ............................ 25
6. காதலினால் அல்ல ............................................ 33
7. யார் மனதில் யார் இருப்பார் ........................... 42
8. உன்னைக் கண்டு நானாட ................................. 49

# அவன்

*அவன் ஏன் அப்படி நடந்து கொண்டான் என்று எனக்கு இன்று வரை தெரியாது. அன்று பிரயோககணித வகுப்பு முடிந்ததும் Organic Chemistry தொடங்கியது. பதினோராம் வகுப்புக்கான மாஸ்டர் வரவில்லையென்பதால் அந்த வகுப்பு மாணவர்களை யும் எமது 12ம் வகுப்புக்குள் விட்டார்கள்.*

*'பெப்பே' தான் அவசரமாக வாங்கில் மேசை களை ஒழுங்கு படுத்தி விட்டது. அது யார் பெப்பே..! என்ற யோசனை உங்களுக்கு வரலாம். அது பாவம். நாங்கள் பெண்கள் எல்லோருமாகச் சேர்ந்து அதுக்கு வைத்த பெயர்தான் 'பெப்பே'. அதென்ன அஃறிணை யில்.. என்று நெற்றியைச் சுருக்குகிறீர்களா? அவனெண்டு சொல்ல முடியவில்லை. வயதில் மூத்தது. அவர் என்று சொல்ல முடியாதபடி பெப்பே.*

*நாங்கள் ரியூற்ரறிக்குள் நுழையும் போது கதவைத் திறந்து விடுவதில் தொடங்கி கரும்பலகை யைச் சுத்தமாக்கி... என்று எல்லாவற்றையும் செய்து வைப்பதுதான் பெப்பேயின் வேலை.*

*யாரோ, நாங்கள் 'பெப்பே' என்று சொல்வதை அதுக்குச் சொல்லி, ஒரு நாள் இடைவேளை நேரம் அது வந்து அதன் அர்த்தம்*

*என்ன? ஏன் தனக்கு அப்பிடிப் பெயர் வைக்க வேண்டும்? என்று கேட்க எங்களுக்குப் பாவமாகி விட்டது. பெயர் வைப்பதில் மும்முரமாக நின்ற சந்திரப்பிரேமா மட்டும் நைஸாக நழுவி விட்டாள்.*

*மனசுக்குள் கனவுகளை வளர்த்துக் கொண்டு மன்மத நினைப்பில் பெண்களுக்கு நடுவில் வேலை செய்து கொண்டிருந்த பெப்பே இப்போதெல்லாம் எங்களைக் கண்டால் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.*

*சில 11ம் வகுப்பு மாணவர்கள் உதவி செய்ய, பெப்பே முகத்தைத் தொங்கப் போட்டபடி வாங்கில் களை அடுக்கிக் கொண்டிருக்கவே, ஆண் மாணவர் கள் சிலர் தடால் புடால் என்று ஓடிவந்து அமரத் தொடங்கினார்கள். இடம் காணாததால் பக்கப் பாடாகவும் வாங்கில்கள் போடப் பட்டன.*

*வகுப்புத் தொடங்கி விட்டது. பெப்பே அவசரமாய் புதுச் சோக்குகளை கொண்டு வந்து மேசையில் வைத்து விட்டு வெளியேறி விட்டது.*

*கும்மர் (குமாரசாமி மாஸ்டர்) வழக்கம் போல Organic Chemistry யை இரட்டை அர்த்தம் தொனிக்க விளக்கிக் கொண்டிருந்தார். சிரிப்பலைகளின் நடுவே அவசரமாய் நோட்ஸ் எடுத்துக் கொண்டிருந்தோம். திடீரென்று என் காலில் ஏதோ தட்டுப் பட்டது. திடுக்கிட்டுக் குனிந்து பார்த்தேன். ஒரு கால் நீண்டிருந்தது. அது பக்கப் பாடாக, எனக்கு வலது பக்கமாக வைக்கப் பட்டிருந்த வாங்கிலில் இருந்த அவனின் கால். நிமிர்ந்து பார்த்தேன். அவன் குனிந்த தலைநிமிராமல் நோட்ஸ் எடுத்துக்கொண்டிருந்தான்.*

என்னை விட இளையவன். 11ம் வகுப்பு மாணவன். எனக்குப் பிரயோககணிதம் படிப்பிக்கும் மாஸ்டரின் மகன். அந்த மாஸ்டர் கடமையே கண் ணானவர். அவர் வகுப்புக்குள் நுழைந்து விட்டால் ஆர்முடுகல், அமர்முடுகல், வேகம், நேரம், கரும்பலகை, சோக், டஸ்ரர்,... இவைகள் தவிர வேறெதுவும் எம் சிந்தனையில் செல்லாது. Chemistry யில் மாதிரி பிரயோககணித வகுப்பில் நிறையப் பெண்களும் இருக்க மாட்டார்கள். ஏதோ, பெண்கள் கணிதம் படிக்கத் தகுதியில்லாதவர்கள் என்பது போல டொக்டர், ரீச்சர் கனவுகளோடு உயிரியலும், தாவரவியலும் படிக்கச் சென்று விடுவார்கள். நானும் கீதாவும் இன்பியும்தான் கணிதம் படிப்போம். மிச்ச எல்லாம் பெடியன்கள்தான். எங்களுக்குத்தான் சின்னதாகக் கூடப் பெண்களின் பக்கமாகச் சிரிக்காமல் சீரியஸாகப் படிப்பிக்கும் அந்த மாஸ்டரின் ஆசிரியத்தன்மையும் திறமையும் தெரியும். அதனால் நாங்கள் மூவரும் அவர் மகனான அவனை மற்றைய மாணவர்கள் போலச் சாதாரணமாக எண்ணாது சற்று எட்டவே வைத்திருந்தோம்.

இதென்னடா, வாங்கிலுக்குக் கீழே தவறுத லாக ஒரு கால் பட்டதுக்கு இத்தனை ஆரவாரமா..! என உங்களுக்குள் ஒரு சிரிப்பான யோசனை வரலாம். அந்தக் காலம் என்ன உதட்டோடு உதடுரசி ´ஹலோ´ சொல்லும் இன்றைய காலமா? ஒன்றாகப் படிக்கும் மாணவனுடன்கூட ஒரு வார்த்தை பேசாது, ஆண், பெண் என்று பிறித்து, பிரித்து வைத்து.. கண்கள் சந்தித்துக் கொண்டாலே பாவம் என்பது போல தலைகுனிந்து திரியும் இற்றைக்கு 28 வருடங்கள் முந்திய காலமல்லவா அது.

*பார்வையே தொடக் கூடாது. புன்னகை, அது தெரியாமல் கூட ஆண் மாணவர்கள் முன் பெண் மாணவர்களுக்குப் பூக்கக் கூடாது. இந்த நிலையில் ஒரு ஆண் மாணவனின் கால் பெண் மாணவியின் காலில் படுவதென்பது சும்மாவா..?*

*அவன் தலை கவிண்டபடியே எழுதிக் கொண்டிருந்தான். யாராவது அவதானித்திருப்பார் களா என்று அறிந்து கொள்ள மெதுவாகப் பார்வையைச் சுழற்றினேன். எல்லோரும் நோட்ஸ் எடுப்பதிலேயே கவனமாக இருந்தார்கள். யாரும் கண்டு கொள்ளவில்லை என்பதில் எனக்குப் பெரும் நிம்மதி. இருந்தாலும் ஏதோ அவமானப்பட்டுப் போன மாதிரியான ஒரு உணர்வு. முன் வாங்கிலில்தான் நான் இருந்தேன். எனக்கு நேரெதிரே கரும் பலகைக்கு முன் நின்று படிப்பித்துக் கொண்டிருக்கும் கும்மர் கண்டிருப்பாரோ என்று மனசுக்குள் ஒரு சின்ன உறுத்தல்.*

*அவன் தலையை நிமிர்த்தியதை நான் காண வில்லை. அவன் நோட்ஸ் எடுக்கும் விதத்தைப் பார்த் தால் அவன் என் காலில் தட்டுப்பட்டதையே உணராதவன் போலத் தெரிந்தான். தெரியாமல்தான் நடந்திருக்கும். அவன் நல்ல பெடியன். என் மனசுக்கு நான் கூறிக் கொண்டேன்.*

*வகுப்பு முடிந்து வெளியில் வந்த போதும் யாரும் இது பற்றி எந்தக் கேள்வியும் கேட்கவில்லை. எனக்கு இப்போ துணிச்சலான நிம்மதி. யாரும் காண வில்லை.*

*அடுத்த வாரம் பாடசாலைக்குச் சென்ற போது எனது நிம்மதி பாடசாலை மதில்களில் கரிக்கட்டியால் குலைக்கப் பட்டிருந்தது. அவனது பெயரை எழுதி, பக்கத்தில் கூட்டல் அடையாளம் போட்டு, எனது பெயரும் எழுதப்பட்டிருந்தது. என்னையும் அவனையும் இணைத்தும் நான் அவனின் காலைத் தட்டினேன் என்றும் அரசல் புரசலான கதைகள் பாடசாலைச் சுவர்களில் எதிரொலித்தன.*

*எனது கால் மாஸ்டரை நோக்கித்தான் நீள முடியுமே தவிர எனக்கு வலதுபக்கமாக இருந்த அவனின் பக்கமாக நீளவே முடியாது. அதற்கான எந்தச் சாத்தியமும் இருக்கவில்லை. அவனாக வேண்டுமென்றே என் பக்கம் நீட்டினானா அல்லது தவறுதலாக நடந்ததா? என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அதை ஒரு தவறான கதையாக ஊருக்குள் உலாவ விட்டுவிட்டான்.*

*"ஏன்ரா இப்படி ஒரு கதையை உருவாக்கினாய்?" என்று அன்று அவனிடம் சென்று கேட்பதற்கு ஆண் பெண்ணுக்கிடையில் அன்றிருந்த இடைவெளி இடம் தரவில்லை. அதனால் இன்று வரை 'அவன் ஏன் அப்படி நடந்து கொண்டான்?' என்ற கேள்விக்கு எனக்குப் பதில் கிடைக்கவும் இல்லை.*

*–15.9.2003*

# இரயில் பயணங்களில்...

**அ**ப்போது எனக்கு 21வயது நிரம்பி யிருந்தது. நான் கர்ப்பமாயிருந்தேன். எனது கணவர் என்னை ரெயினில் ஏற்றி, பக்கத்து இருக்கையில் அமர்ந்திருந்த இளைஞன் ஒருவனிடம் எனக்கு ஏதாவது உதவிகள் தேவையாயின் செய்து கொடுக்கும்படி சொல்லி விட்டுச் சென்றார். கொழும்பிலிருந்து கொடிகாமத்திற்குத் தனியாகப் பயணிப்பது எனக்குப் புது அனுபவம். அதனால் சற்றுப் பயமாகவும் தயக்கமாகவும் இருந்தது.

மூன்று மாதங்கள் மட்டுமே ஆனதால் எனது கர்ப்பமான வயிறு வெளியில் தெரியவில்லை. ஆனாலும் கர்ப்பமான பெண்களுக்குள்ள வழமை யான இயல்புகள் என்னையும் விட்டுவைக்கவில்லை. சத்தியிலும் குமட்டலிலும் அதனாலான அசௌகரி யங்களிலும் நான் நன்கு மெலிந்திருந்தேன். பூப்போட்ட பச்சை நிறச்சேலை உடுத்தியிருந்தேன். அதற்கு மச்சிங்காக பச்சை மேற் சட்டையும் என் உடம்போடு ஒட்டியிருந்தது.

என் கணவரின் சிபாரிசு இல்லாமலே எனக்கு உதவத் தயாராக இருந்தான் அந்த இளைஞன்.

ரெயின் வெளிக்கிட்டு, என்னை விட்டு என் கணவர் பிரிந்த கையோடு அந்த இளைஞன் அவசரமாக எழுந்து, என் இருக்கைக்கு வந்து விட்டான்.

"என்ன வேணும்?" அவன் கேட்ட விதமே எனக்கு என்னவோ போலிருந்தது. அவனைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கவில்லை.

சடாரென்று எழுந்து இன்னொரு இருக்கைக்கு நகர்ந்தேன். வெறுமையாக இருந்த அந்த இருக்கையில் இருந்து அவனைத் திரும்பிப் பார்த்தேன். அவன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான். "வந்து இங்கே இரேன்" என்பது போலச் சைகை செய்தான். நான் அவசரமாகத் திரும்பி விட்டேன்.

இறாகம வரை பிரச்சனைகள் எதுவும் இல்லை. தனியாகத்தான் இருந்தேன். அவன் வந்து என் பக்கலில் அமர்ந்து விடுவானோ என்ற பயம் மட்டும் என்னைத் தொந்தரவு செய்து கொண்டே இருந்தது. நான் எதிர்பாராத ஒரு கணத்தில் இறாகம புகையிரதநிலையத்தில், என் பக்கலில் இன்னொரு இளைஞன் வந்து அமர்ந்தான். நான் யன்னல் பக்கமாக நன்கு தள்ளி அமர்ந்தேன். அவன் என் பக்கம் திரும்பி மெதுவாகச் சிரித்தான். சாந்தமாக இருந்தான். முதலாமவன் மேல் இருந்த பயம் இவன் மேல் எனக்கு வரவில்லை. ஆனாலும் சங்கடமாக இருந்தது.

வேறெங்காவது இடமிருக்கிறதா என எட்டிப் பார்த்தேன். எல்லா இருக்கைகளும் நிரம்பி வழிந்தன.

*இரண்டாமவன் என்னோடு மெதுமெதுவாகப் பேச ஆரம்பித்தான். நான் கஸ்டப்பட்டுப் பதில் சொல்லிக் கொண்டிருந்தேன். தனக்குச் சாப்பாடு வாங்கப் போகும் போது எனக்கும் ஏதாவது வாங்கிக் கொண்டு வர வேண்டுமா எனக் கேட்டான். வயிற்றுக்குமட்டலுக்கு ஏதாவது சாப்பிட்டால் நல்லாயிருக்கும் போலிருந்தது. ஒரு சான்ட்விச் வாங்கும் படி சொல்லிக் காசு கொடுத்தேன். காசை வேண்ட மறுத்தான். "காசு வேண்டாவிட்டால் எனக்கு சான்ட்விச் வேண்டாம்" என்றேன். காசை வாங்கிக் கொண்டு போய், சான்ட்விச் வாங்கிக் கொண்டு வந்தான். அவன் மேல் கொஞ்சம் நன்றியாயிருந்தது.*

*இப்போது அவன் என்னுடன் சரளமாகப் பேசத் தொடங்கியிருந்தான். பல்கலைக்கழகத்தில் படிக்கிறேன் என்றான். சாதாரணமாகக் கதைத்துக் கொண்டு போனவன் திடீரென "ஐ லவ் யூ" என்றான். "நான் திருமணமானவள்" என்றேன். அவன் நம்பவில்லை. சுத்தமாக அவன் நம்பவில்லை. "நான் கர்ப்பமாகக் கூட இருக்கிறேன்" என்றேன். அவன் நம்பவே இல்லை. நான் முழுப்பொய் சொல்வதாகவே அவன் நம்பினான். என்னைத் தன்னுடன் வவுனியாவுக்கு வந்து விடும்படி கேட்டான். நான் சம்மதித்தால் என் வீட்டுக்கு வரவும் தயாராக இருந்தான். தனது முகவரியைத் தருகிறேன் என்றான். "வேண்டாம்" என்று சொல்லி விட்டேன்.*

*வவுனியா புகையிரத நிலையம் வந்ததும் ரெயினை விட்டு இறங்க மனமின்றி அப்படியே*

*இருந்தான். என்னுடன் யாழ்ப்பாணம் வரப் போகிறேன் என்றான்.*

*அவனது செய்கை சற்றுக் குழந்தைப் பிள்ளைத் தனமாகவே இருந்தது. "போய் உங்கள் பல்கலைக்கழகப் படிப்பைத் தொடருங்கள்" என் றேன். அரைமனதோடு இறங்கிச் சென்றான்.*

*வவுனியாவில் ரெயினால் இறங்கும்வரை அவன் வரம்பு மீறவுமில்லை. நான் கர்ப்பமாயிருக் கிறேன் என்பதை நம்பவுமில்லை.*

*இப்போது அவன் ஒரு பட்டதாரியாக இருக்க லாம். அல்லது எமது நாட்டின் போர் அவனை அடித்துப் புரட்டி அகதியாக்கி இருக்கலாம். அல்லது இன்னும் ஏதாவது நடந்திருக்கலாம். எதுவாயினும்...*

*அவனை என் நினைவுகளிலிருந்து முற்று முழுதாகத் தூக்கியெறிந்து விட முடியவில்லை. எப்போதாவது வந்து முகம் காட்டிப் போகிறான்.*

*–27.5.2004*

# தடம்பதித்தவர்கள்

*எமது வாழ்வில் நல்லவிதமாகவோ அன்றில் கெட்டவிதமாகவோ மனதில் தடம்பதித்துப் போனவர்கள் பலர் இருப்பார்கள். அவர்கள் அடிக்கடியோ அன்றில் எப்போதாவதோ எமது நினைவுக்குள் வந்து முகம் காட்டிச் செல்வார்கள். அப்படியாக எனக்குள் முகம் காட்டுபவர்களில் இவனும் ஒருவன்.*

*இவன் பற்றிய பூர்வீகம் எதுவுமே எனக்குத் தெரியாது. நான் Tuitoryக்குப் போகும் ஒவ்வொரு பொழுதிலும், இவன் வகுப்பு நடைபெறும் அறையின் வாசலில் நின்று என்னைப் பார்த்துக் கொண்டே இருப்பான். அந்த வாசல் Tuitoryயின் வாசலைப் பார்த்த படியே இருப்பதால் உள்ளே நுழைவது யாராக இருந்தாலும் அவனைத் தரிசிக்காது செல்ல முடியாது. நான் வரும் நேரங்களில் மட்டுந்தான் அதில் அவன் நிற்கிறானா அல்லது எப்போதும் நிற்கிறானா என்பது எனக்குத் தெரியாத விடயம்.*

*இப்போதென்றால் ஒரு தெரிந்தவரைக் கண்டால் ஒரு "ஹலோ"வோ அல்லது ஒரு "வணக்கமோ" அதையும் விட்டால் ஒரு புன்னகை சிந்தலோ இல்லாமல் நகர மாட்டோம். அப்போது (31வருடங்களுக்கு முன்), அதுவும் ஒரு பதின்னான்கு வயதுப் பெண் ஒரு ஆணைக்கண்டு தெரிந்தது போல் பாவனை பண்ணிக் கொள்வது விபரீதமான*

விளைவுகளையே தரும். அதற்கு மேலால் அவன் மீது எனக்கு எந்த விதமான ஈடுபாடும் இருக்கவும் இல்லை. அதனால் எந்தவித பாவனையுமின்றி நான் அவனைத் தாண்டி விடுவேன்.

நிட்சயம், அவன் என்னை விட வயதானவனாக இருப்பான். ஆனாலும் ஆங்கில வகுப்புக்கு மட்டும் எனது வகுப்பில் வந்தமர்வான்

அவனது பெயரை, ஆங்கில வகுப்பில் ஆங்கில ஆசிரியர் கூப்பிடும் போதுதான் நான் அறிந்து கொண்டேன். அவனது பிறப்பிடம் மட்டக்களப்போ அல்லது திருகோணமலையோ அல்லது வேறிடமோ தெரியவில்லை. ஆனால் எங்கேயோ இருந்து பருத்தித்துறைக்கு வந்து அந்த ரியூற்ரறியிலேயே ஒரு அறையில் தங்கியிருந்து படிக்கிறான் என்பது மட்டும் அரசல் புரசலாக என் காதிலும் வந்து விழுந்திருந்தது.

Tuitoryயில் ஒரு பாடம் முடிந்ததும் வரும் இடைவேளையின் போது பெண்கள் Toilet பக்கம் செல்வதாயின் அவனது அறையைக் கடந்துதான் செல்ல வேண்டும். நான் அந்த அறையைக் கடக்க வேண்டிய ஒவ்வொரு பொழுதிலும் அவன் ஓடி வந்து அறை வாசலில் நின்று என்னையே பார்த்துக் கொண்டு நிற்பான். ஒரு நாளேனும் அவன் என்னுடன் கதைக்க முயற்சித்ததாய் எனக்குத் தெரியவில்லை. ஆனால் எப்போதுமே அவன் முகத்தில் ஒரு மெல்லிய புன்னகை கவிந்திருக்கும்.

இது ஒரு புறம் இருக்க, எங்களுக்கு பத்தாம் வகுப்புப்பரீட்சை (O/L) நெருங்கிக் கொண்டிருந்தது.

பிரியப் போகிறோம் என்ற நினைப்பில் எனது சக மாணவிகள் Autograph களுடன் திரிந்தார்கள். "ஆழ்கடல் வற்றினாலும் அன்புக்கடல் வற்றக் கூடாது" என்பதில் தொடங்கி எத்தனையோ சினிமாப் பாடல்களின் வரிகளால், பழமொழிகளால்... என்று தொடர்ந்து "என்னை மறந்து விடாதே..." என்பது வரை எழுதி எழுதி Autographஐ நிறைத்தார்கள். நானும் என் பங்குக்கு எனது Autographஐ ஒவ்வொருவரிடமும் நீட்டி நீட்டி வாழ்த்துக்களையும் கையெழுத்துக்களையும் வாங்கிக் கொண்டேன். இத்தனையும் சகமாணவிகளிடந்தான். மருந்துக்குக்கூட சக மாணவன்களிடம் கையெழுத்தை வாங்கும் பழக்கம் அப்போது இருக்கவில்லை.

அன்று Chemistry வகுப்பு முடிய ஐந்து நிமிட இடைவேளை. அவசரமாக வகுப்பறையை விட்டு வெளியில் எமக்கான அறைக்குச் சென்று தண்ணீர் குடித்து... மீண்டும் ஆங்கில வகுப்புக்குத் திரும்பிய போது எனது மேசையில் எனது புத்தகங்களுடன் இருந்த எனது Autographஐக் காணவில்லை.

எல்லா மாணவிகளையும் மட்டுமல்லாது Tuitory பொறுப்பாளரையும் கேட்டு விட்டேன். 'ம் கூம்...' அது எங்கேயென்றோ, யார் கைக்குப் போயிருக்குமென்றோ யாருக்குமே தெரியவில்லை. "பெடியன்களில் யாரோ எடுத்து விட்டாங்கள் போலை" சில மாணவியர் கருத்துத் தெரிவித்தனர்.

பார்த்துப் பார்த்து வேண்டிய கையெழுத்துக் களும் வாழ்த்துகளும் தொலைந்து போய் விட்டதில் எனக்கு வருத்தந்தான்.

*என்ன செய்வது..?*

*ஒரு வாரத்துக்குள் அம்மாவிடம் கேட்டு இன்னொரு Autograph வாங்கி, மீண்டும் ஒவ்வொரு வரிடமாக நீட்டிக் கொண்டிருந்தேன். இப்படியே Tuitoryயின் இறுதிவாரமும் வந்து விட்டது. அந்த வாரத்தில் ஒருநாள், இடைவேளைக்கு வெளியில் போய் வந்த போது, தொலைந்த எனது Autograph எனது புத்தகங்களின் மேல் வைக்கப் பட்டிருந்தது. எனக்கு அளவிலா மகிழ்ச்சி. கூடவே பயமும் யார் யார் என்னென்னவெல்லாம் கிறுக்கியிருப்பார்களோ என்ற குழப்பமும்.*

*ஆங்கில வகுப்பு முடிந்து வீடு சென்றதும் Autographஇன் பக்கங்களைப் புரட்டினேன். எனது எண்ணம் சரியாகவே இருந்தது. மூன்று பக்கங்களில் ஒரே கையெழுத்தில் யாரோ ஒருவர் அழகாக எழுதி யிருந்தார். அவற்றில் ஒரு பக்கத்தில்*

**கோட்டையிலே பெண் பிறந்தாலும்**
**தலையில் கொட்டிய படியேதான் நடக்கும்**

*என்ற வாக்கியங்கள் இருந்தன.*

*அந்த ஒரு வாரத்துக்குள் எனது நண்பிகள் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டதில் அதை எழுதியது இவனாக இருக்கலாம் என்ற பதில் எனக்குக் கிடைத்தது. அவர்கள் தந்த தகவல்களின்படி அவனது கையெழுத்துத் தான் அது என என்னால் ஊர்ஜிதம் செய்து கொள்ளவும் முடிந்தது.*

*ஆனால் எனது பத்தாம் வகுப்புப் பரீட்சை*

*முடிந்து, முடிவுகளுக்காகக் காத்திருந்து, மீண்டும் நான் பதினோராம்வகுப்பில் அதே Tuitoryயில் போய் சேர்ந்த போது அவன் அங்கு இல்லை.*

*"நீயா எழுதினாய்?" என்றோ, அல்லது "ஏன் அந்த வாக்கியங்களை எனக்கு எழுதினாய்?" என்றோ கேட்பதற்குக் கூட எனக்கு ஒரு வாய்ப்புத் தராமல் அவன் தனது சொந்த ஊருக்குப் போய் விட்டான்.*

*அந்த Autographம், இந்திய இராணுவம் எனது தம்பியைத் தேடி வந்து அட்டகாசம் புரிந்த ஒரு பொழுதில் எமது வீட்டுக்குள்ளிருந்து வீசி எறியப் பட்டு விட்டது.*

*ஆனால் இரக்கமா, விருப்பமா என்று தரம் பிரித்தறிய முடியாத அவனது பார்வையையும் அவன் எழுதிய அந்த வசனங்களையும் என் மனதுள் இருந்து தூக்கியெறிய முடியவில்லை.*

*–7.11.2005*

# இதில் நியாயங்கள் யார் சொல்லக் கூடும்?

*இவன் ஏன் அப்படி நடந்து கொண்டான் என்று எனக்கு இன்று வரை தெரியாது. என் ஊரவன்தான். எனது வீதியில்தான் இவன் வீடும். என் அண்ணனின் நண்பனுக்கு இவன் அண்ணன் என்பதாலோ என்னவோ இவன் மீது எனக்கு ஒரு மதிப்பும் இருந்தது.*

*சின்னவயதில் அம்மா எதையாவது கொடுத்து விட்டு வரச் சொன்னால் கொண்டு போய் இவனது அம்மாவிடம் கொடுத்துவிட்டு வருவேன். என் தோதுக்கு அங்கு யாரும் இல்லை. அவனது அக்கா என்னை விடப் பல வருடங்கள் மூத்தவள். மற்றதெல்லாம் பெடியன்கள். அதனால் அங்கு போவதில் எனக்கு ஆர்வமும் இருந்ததில்லை.*

*எனது அம்மாவும் அவனது அம்மாவும் மாலை வேளைகளில் எங்கள் வீட்டு விறாந்தை நுனியில் இருந்து ஏதோ குசுகுசுப்பார்கள். சில வேளைகளில் எங்கள் வீட்டு மல்லிகைப் பந்தலின் கீழ் இருந்தும் கதைப்பார்கள். இவனது அப்பாவும் இடையிடையே எனது அப்பாவுடன் கதைப்பார். எப்போதாவது அழகாக வெளிக்கிட்டுக் கொண்டு அம்மாவும் அப்பாவும் அவர்கள் வீட்டுக்குச் சோடியாகப் போய்*

வருவார்கள். நானும் அவர்களுடன் கூடப் போக வேண்டிய கட்டங்களும் வந்திருக்கின்றன. அந்தப் பொழுதுகளை எப்படிக் கழிப்பது என்று தெரியாமல் நான் அவர்களது வீட்டுப் பூந்தோட்டத்துக்குள் சுற்றுவேன். தென்னைமரத்தோடு சாய்ந்திருப்பேன். என்னை விட நான்கு வயது அதிகமானாலும் அப்போது இவனும் சின்னப் பெடியன்தான். ஆனாலும் கிரிக்கெட் மட்டையோடு வெளியே போய் விடுவான். இவனது அக்கா மட்டும் என்னைக் கூப்பிட்டு வைத்துக் கொஞ்சம் கதைப்பா. இந்தளவு உறவு எமது இரு குடும்பங்களுக்கும் இடையே இருந்தது.

இந்த நித்தியங்களில் பெரிதான மாற்றங்கள் எதுவும் ஏற்படாமலே, காலங்கள் ஓடின. நான் பத்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் போது ஒரு நாள் காலை நான் பாடசாலைக்குச் சென்று கொண்டிருக்கையில் வடமராட்சி வீதிச் சந்தியில் வைத்து இவன் ஏதோ ஒரு நோட்டீஸை விநியோகித்துக் கொண்டிருந்தான். நானும் தங்கையும் இவனைத் தாண்டும் போது எனக்கும் நீட்டினான். ஆண்கள் என்றாலே ஒதுங்கிச் செல்ல வேண்டிய கட்டாயம் அன்றைய பெண்களுக்கான எழுதப்படாத சட்டமாகவே இருந்தாலும் அதுவே எனது பழக்கமாகவும் இருந்தாலும் தந்தது இவன் என்பதால் தயங்காமல் வாங்கிச் சென்றேன். அது ஏதோ ஒரு பகிஸ்கரிப்பை ஒட்டிய நோட்டீஸ்தான்.

ஆனால் மதிய இடைவேளையில் வீடு திரும்பியபோது அண்ணன் கொஞ்சம் மூட்அவுட்டாக நின்றான். மதிய உணவில் கூடக் கை வைக்காமல் எனக்காகவே காத்திருப்பது போல நின்றான்.

*கண்களில் அவமானம் கலந்த கவலை தெரிந்தது. என்னைக் கண்டதும் "ஏன் அவன்(####) லெற்றர் தர வாங்கினனீ?" கேட்டான். எனக்கு அழுகையே வந்து விட்டது.*

*"ஆர் சொன்னது லெற்றர் எண்டு?"*

*"அவன் தான் சொன்னவன், உன்ரை தங்கைச்சி நான் லெற்றர் குடுக்க வேண்டினவள், எண்டு"*

*நல்லவேளையாக நான் அந்த நோட்டீஸை எனது பாடசாலைப் புத்தகங்களுடனேயே வைத்திருந்தேன். அதை அண்ணனிடம் காட்டி சந்தேகத்தைத் தீர்த்துக் கொண்டேன். ஆனாலும் இவனின் அந்தச் செயல் என்னை மிகவும் உறுத்திக் கொண்டே இருந்தது. கவலையாகக் கூட இருந்தது.*

*அதன் பின் இவனைத் தெருவில் எங்காவது காண நேர்ந்தாலும், காணாத மாதிரியே பாவனை பண்ணினேன். "ஏன் அப்படி என் மேல் பழி சுமத்தினாய்?" என்று கேட்பதற்கெல்லாம் அப்போது எனக்குத் துணிவு வரவில்லை. காலங்கள் வருடக் கணக்கில் ஓடிய போதும் நான் அதை மறக்கவு மில்லை.*

*எனக்குத் திருமணமாகிய பின் எனது கணவர் கூட ஒருநாள் "அவன் லெற்றர் தர வாங்கினாயாமே!" என்று, சிறிய சந்தேகத்துடன் கேட்டார். அப்போது இவன் வெளிநாட்டுக்குச் சென்று விட்டான்.*

*இச் சம்பவம் நடந்து கிட்டத்தட்ட 10–12 வருடங்களின் பின் இவனுக்குத் திருமணப் பேச்சுக்*

*கள் நடந்து, அவனும் வெளிநாட்டிலிருந்து வந்து எங்கள் உறவுப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான்.*

*அதன் பின்னர் எங்களூர் வழக்கப்படி ஒவ்வொரு உறவினர் வீட்டுக்கும் கால்மாறிச் செல்கையில் எமது வீட்டுக்கும் வந்தான். எமது வீட்டில் எல்லோருமாக இவனையும் மணப்பெண் ணையும் வரவேற்று வரவேற்பறையில் இருத்தி வைத்துக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். அரை மணி நேரமாக நான் அந்தப் பக்கமே போகாமல் இருந்தேன். எனது தங்கைமார்தான் வந்து "அக்கா வாங்கோ. புதுமணத்தம்பதிகள் எப்பிடி வடிவாய் இருக்கினம் எண்டு வந்து பாருங்கோ" என்று வருந்தி அழைத்தார்கள். எனது அண்ணன் அப்போது ஊரில் இல்லை. இருந்திருந்தால் வந்து கதைக்கும் படி என்னை அழைத்திருக்க மாட்டான்.*

*மனமில்லாமல் வரவேற்பறைக்குச் சென்றேன். புதுமணக் களையோடு அவன் இருந்தான். எதுவுமே நடக்காதது போல என்னோடு கதைத்தான். என்னால் அதிகம் கதைக்கமுடியவில்லை. "என் மீது ஏன் களங்கம் சுமத்த முயன்றாய்?" என்று கேட்கவும் முடியவில்லை.*

*ஆனால், எப்போதோ ஒரு நாள், என் வீட்டுக்கு நான் இல்லாத வேளையில் வந்த போது எனது ஓட்டோகிராபை(autograph) எடுத்து*

***இது நீரோடு செல்கின்ற ஓடம்***
***இதில் நியாயங்கள் யார் சொல்லக் கூடும்***

*என்று அவன் எழுதி வைத்த பாடல் வரிகள் சட்டென்று நினைவில் வந்து போயின. அதைக் கூட ஏன் எழுதினான் என்று எனக்கு இன்றுவரை தெரியாது.*

*இத்தனைக்கும் இவன் ஒரு விளையாட்டுத் தனமான பொறுப்பற்ற பெடியன் அல்ல. படிப்பு, வேலை, குடும்பம்... என்று வாழ்க்கையின் படிகளில் சரியாகவே ஏறிக் கொண்டிருந்தவன்.*

*இன்றைய பொழுதில் அந்த விடயம் ஒரு பிரச்சனையே இல்லை. ஆனாலும் இற்றைக்கு 32 வருடங்களுக்கு முந்திய அன்றைய பொழுதில், ஒரு பெண்ணை மிகப்பெரிய குற்றவாளியாக நிறுத்தக் கூடிய, குடும்ப வாழ்க்கையையே குலைக்கக் கூடிய விதமான அந்தப் பழியை ஏன் என் மேல் சுமத்த முனைந்தான் என்ற கேள்வி இன்னும் எனக்குள் இருக்கிறது.*

*15.11.2006*

# காதல் ஒரு போர் போன்றது

*அலை அலையாய் அவன் நினைவு வந்து, என் மனமலையில் மோதுகையில் சிறு மண்மேடாய் சரிந்து போகிறேன். ஒரு பனி போலக் கரைந்து போகிறேன்.*

*நினைவுகளின் தொடுகையிலே உயிர்ப் பூக்களைச் சிலிர்க்க வைக்கின்ற அளவுக்கு அவனுக்கும் எனக்கும் என்ன சொந்தம்? அவனோடு எனக்கென்ன பந்தம்?*

*குளிரிலே இதமான போர்வையாய், வியர்க்கையில் குளிர்த் தென்றலாய், மழையிலே ஒரு குடையாய், வெயிலிலே நிழல் தரு மரமாய், தனிமையில் கூடவே துணையாய், கால்களில் தழுவுகின்ற கடல் அலையாய்... அவன் நினைவுகள் எப்போதும் என்னோடுதான்.*

*ஓ... இது தான் காதலா! இது காதலெனும் பந்தத்தில் வந்த சொந்தமா? எனக்கும் தெரிய வில்லை.*

*வாழ்வில் யார் யாரை எந்தெந்தப் பொழுது களில் சந்திக்கப் போகிறோம் என்பதையோ அவர்களில் யார் யார் எமக்குப் பிடித்தமான*

*வர்களாகி விடப் போகிறார்கள் என்பதையோ எம்மில் யாருமே முற்கூட்டியே அறிந்து வைத்திருப்ப தில்லை. ஏன், எதற்கு, எப்படி என்று தெரியாமலே நாம் சந்திப்பவர்களில் சிலர் மட்டும் எம் நெஞ்சங்களில் பிரத்தியேகமான இடத்தைப் பிடித்து விடுகிறார்கள். அப்படித்தான் இவனும் என்னுள் குடி புகுந்து, என் மனமுகட்டில் அமர்ந்திருக்கிறான்.*

*இன்றைய பொழுதில் அவன்தான் எல்லாமு மாய் எனக்கு இருக்கிறான். எந்தக் கணத்திலும் அவனை என்னால் மறக்க முடிவதில்லை. அவன் பக்கத்தில் இல்லை என்று சொல்ல முடியாத படி அவன் நினைவுகள் என்னுள்ளே விருட்சமாய் வியாபித்து, பூக்களாய் பூத்துக் குலுங்கி, அழகாய், கனி தரும் இனிமையாய் பிரவாகித்து இருக்கின்றன. எனது அசைவுகள் கூட அவனை மையப்படுத்தியே தொடர்கின்றன. எதைச் செய்தாலும் எங்கோ இருக்கும் அவன் என் பக்கத்தில் அமர்ந்து பார்த்துக்கொண்டு இருக்கிறான் என்பது போன்ற உணர்வுகள் கூடி, எப்படியோ எனது வேலைகள் எல்லாமே அவனுக்காகவே செய்யப் படுவன போல ஆகி விடுகின்றன.*

*இவையெல்லாம், இந்த உணர்வுகள் எல்லாம் எந்தக் கணத்தில் ஆரம்பித்தன என்று தெரிய வில்லை. எதேச்சையாகத்தான் நடந்தது என்று சொல்லி விடவும் முடியவில்லை. எப்படி என்றும் தெரியவில்லை. ஆனால் அவன் இல்லாமல் நான் முழுமையாக இல்லை என்பதை மட்டும் ஒவ்வொரு பொழுதிலும் உணர்கிறேன். இது காதல்தானே!*

*காதல் பொய். காதல் என்று ஒன்றுமே இல்லை. அது வெறும் பருவக்கோளாறு மட்டுமே என்று பலர் சொல்லக் கேட்டிருந்தாலும் காதல் இனிமையானது என்பதை உணர்ந்துதான் வைத் திருந்தேன். இப்போதுதான் அதன் முழுமையையும் உணர்கிறேன்.*

*அவன் எப்போதும் என் நினைவுகளில் சுழன்று கொண்டே இருக்கிறான். ஆனாலும் அவனை எப்போதும் ´மிஸ்´ பண்ணிக்கொண்டே இருக்கிறேன். அவனைத் தவிர்த்து வேறெதையும் என்னால் சிந்திக்க முடியவில்லை.*

*'காதல் கொண்ட அனைவரும் பிதற்றும் வார்த்தைகள்தானே இவை' என்று சொல்கிறீர்களா? அப்படித்தான் சொல்வீர்கள் நீங்களும் காதலில் விழும் வரை.*

*அதென்ன காதலில் விழுவது, அது என்ன குளமா, கிணறா என்று கேட்கிறீர்களா? அப்படித் தான் முன்னர் நானும் யோசித்திருக்கிறேன்.*

*எத்தனையோ தடவைகள், எத்தனையோ பேர் என்னருகில் கொஞ்சிக் குலாவிக்கொண்டு இருந்திருக்கிறார்கள். அப்போது அவையெல்லாம் ஒரு பொருட்டாகவே எனக்குத் தெரிந்ததில்லை. ஆனால் இப்பொழுது யாராவது என்னருகில் கட்டி யணைத்தாலோ அல்லது கொஞ்சிக் குலாவினாலோ நான் தடுமாறிப் போகிறேன்.*

*காதல் என்பது உடல்களைவிடுத்து உள்ளங்*

*கள் மட்டும் ஸ்பரிசிக்கும் ஒரு இனிய பிணைப்பு என்றுதான் இதுவரை கருதியிருந்தேன். இப்போது அவன் முன் என் கருத்துக்கள் கொஞ்சம் தள்ளாடுகின்றன. அன்பை, தழுவி உணர்ந்து கொள்வது போல, இறுக அணைத்து பகிர்ந்து கொள்வது போல, காதலையும் ஆலிங்கனத்தால் உணர்ந்து கொள்ளலாம், பகிர்ந்து கொள்ளலாம்... என்பதெல்லாம் அவனோடான நேசத்தின் பின்தான் எனக்குப் புரிந்தது. ஒரு பார்வையால், ஒரு சிரிப்பால்... என்று காதலை உணர்த்தலாந்தான். அதே போல ஒரு தொடுகையால், ஒரு அன்பான அணைப்பாலும் கூட காதலை உணர்த்தலாம்.*

*அவன் நினைவுகள் என்னை எத்தனை தூரம் பரவசப் படுத்துகின்றனவோ அதேயளவுக்கு என்னை வளைக்கும் அவன் கரங்கள் என் வரை நீளாதோ என்று ஏங்கவும் வைக்கின்றன. என் காதோரம் படர்ந்து என்னைச் சிலிர்க்க வைக்கின்ற அவன் மூச்சுக் காற்றை இந்தக் காற்று தன்னோடு கூட்டி வராதோ என்று மனம் சபலம் கொள்கிறது. ஏகாந்தப் பொழுதுகளிலெல்லாம் மனம் அவனோடு கை கோர்த்து நடக்கிறது. அருவியின் ஓசை அவன் சிரிப்பையும் தென்றலின் தழுவல் அவன் அணைப்பையும் இயற்கையின் தோற்றம் அவன் அழகையும் என்னுள் கவிதைகளாய்த்தெளிக்கின்றன. உதிக்கின்ற கவிதைகளில் எல்லாம் அவன் பிம்பந்தான் உயிர் கொள்கிறது.*

*முகம் பார்க்காமலே எழுத்தால், குரலால்... என்று ஏதேதோ காரணங்களால் நெஞ்சைத் தொட்டவர்கள் பலர். எத்தனையோ நூறு*

*மின்னஞ்சல்களின் மத்தியில், முகமே தெரியாத ஒருவனின் ஓரிருவரிகளே இதயச்சுவர்களை வேர்க்க வைக்கின்றன. முழுமதியாய் சிரிக்க வைக்கின்றன. காற்றுச் சுமந்து வரும் ஒரு குரல் நெஞ்சச் சுவர்களில் அதிர்வுகளை ஏற்படுத்துகிறது. அந்த எழுத்துக்க ளுக்கு அல்லது அந்தக் குரலுக்கு அப்படி என்ன சக்தி இருக்கிறது என்று தெரிவதில்லை. அப்படித்தான் இவனிடமும் என்ன இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. அவன் என்னை ஆக்கிரமித்தானா அல்லது நான் அவனுள் என்னைத் தொலைத்தேனா தெரியவில்லை. எதையும் பிரித்தறியவும் முடிய வில்லை.*

*அவனை நினைக்கும் போதெல்லாம் நெஞ்சக் கூட்டுக்குள் ஏதோ உருள்வது போன்றதொரு உணர்வு. அந்தரம். தவிப்பு. நினைக்கும் போதெல் லாம் என்றால்.. மறந்தும் போகிறேன் என்றல்லவா அர்த்தம் கொள்ளும். அப்படி அவனை மறப்பதும் இல்லை. எத்தனையோ முக்கியமான விடயங்கள் எல்லாம் மறந்து போகும். அவனை மட்டும் எந்தப் பொழுதிலும் மறக்க முடிவதில்லை. அவன் நினைவு களே ஆதார சுருதியாய், என்னை ஆகர்ஷிக்கும் பொழுதுகளாய்... அவனில்லாமல் நானில்லை என்ற நிலையில்... படுக்கும் போது கூட அவன் நினைவுகளைத் தான் போர்த்திக் கொண்டு படுக்கிறேன். இது காதல்தானே!*

*மௌனம் கூட அழகு என்று சொல்வார்கள். நான் கூட பலருக்கும் எனது மௌனத்தையே பதிலாக்கியிருக்கிறேன். ஆனால் இப்போதெல்லாம் மௌனத்தை என்னால் சகித்துக் கொள்ள முடிவ*

*தில்லை. விழி பேசும்போது மொழி தேவையில்லைத் தான். பார்க்கவே முடியாத தூரத்தில் மௌனம் எப்படி அழகாக இருக்கும்? அவன் மௌனமாய் இருக்கும் பொழுதிலெல்லாம், பிரபஞ்சம் பிரமாண்ட மாய் பரந்து விரிந்திருப்பது போலவும் நான் மட்டும் அங்கு தனியாக அமர்ந்திருப்பது போலவும் உணர்கிறேன். எங்கே அவன்? எந்த அலையிலும் நம் சொந்தம் கலையாது என்று சொன்னவன் இப்போ எங்கே போய் விட்டான்? என்று கலங்குகிறேன். மனம் கலைந்து, உடல் களைத்து, சலித்து விம்முகிறேன். சிறு துரும்பின் அசைவில் கூட அவன் மௌனம் என்னில் கண்ணீராய் சிதறி விடக் காத்திருக்கிறது.*

*மீண்டும் மீண்டுமாய் மின்னஞ்சல் கணக்கைத் திறந்து பார்க்கிறேன். எத்தனையோ வந்திருந்தாலும் அவனது வரவில்லை எனும்போது மனசு வெறுமை யாகி விடுகிறது. அந்த ஒரு சிறிய தாமதமே, ஏன்? எப்படி மறந்தான்? ஒரு மின்னஞ்சல் எழுதக் கூட முடியாமல் என்னை மறந்து விட்டானா? என்ற கேள்விகளை எனனுள் மிகுந்த ஆதங்கத்தோடு அடுக்கத் தொடங்கி விடுகிறது. அந்தப் பொழுது களில் எல்லாம் நான் சோகத்தில் துவண்டு போகிறேன். இதயம் இருண்டு போவது போல உணர்கிறேன். கணப் பொழுதுகளும் யுகங்களாய் நீள்கின்றன.*

*தொலைபேசி அழைப்புக்கள் ஒவ்வொன்றுமே அவன்தான் என்ற நினைப்பில் மின்சாரத் தாக்குதலாய் என்னை அதிர வைக்கின்றன. பின் அவனில்லை என்றானதும் காற்றுப்போன பலூனாய்*

*எல்லா அதிர்வுகளும் கலைந்து போகின்றன. எதையும் செய்ய முடியாமல், உடல் வலுவிழந்தது போலச் சோர்கிறது. மனம் சாப்பிட மறுக்கிறது. அடிக்கடி கண்கள் பனித்துப் பனித்து விழியோரங் களில் வழிகின்றன. குழறி அழுது விடலாம் போலிருக்கிறது. மை கொண்டு எழுதியவை என் மனசு போலக் கண்ணீரில் கரைகின்றன. ஏன் ஏன் இப்படியானது? ஏன் என்னை இப்படிப் பைத்தியமாய் ஆக்கினான்? என்று என்னையே கேட்கிறேன். ´காதல் ஒரு போர் போன்றது' என்பதை அப்போதுதான் உணர்கிறேன்.*

*ஆனாலும் அடுத்து வரப்போகும் அவனது ஒரு அழைப்பிலோ அல்லது சின்ன மின்னஞ்சலிலோ நான் சிறகடிப்பேன். இந்த உலகத்திலேயே மிகவும் சந்தோசமானவளாக ஆனந்தச் சிறகுகளை விரித்த படி உயர உயரப் பறந்து கொண்டே இருப்பேன். என் வானம் எனக்கு மட்டும் சொந்தமாக இருக்கும். மீண்டும் ஏதோ ஒரு வார்த்தையாலோ அல்லது வார்த்தைகளே இல்லாத மௌனத்தாலோ அவன் என்னை நோகடிக்கும் வரை பறந்து கொண்டே இருப்பேன். அவன் என்னை நினைக்கவில்லையோ என்ற நினைவுகளுடன் மோதி, மூக்குடைந்து, என் சிறகுகள் கிழிந்து கீழே தொப்பென வீழும் வரை பறந்து கொண்டே இருப்பேன். வீழ்ந்த பின்னும் மின்னஞ்சல் தேடி, தொலை பேசி அழைப்புக்காய் ஓடி... அவன் நினைவுகளில் வாடிக் காத்திருப்பேன்.*

*அவ்வப்போது என் கண்கள் பனித்து விழியோரம் உருள்கின்ற கண்ணீர்த் துளிகளிலும் ஏகாந்தப் பொழுதுகளில் இதழோரம் துளிர்க்கின்ற*

*புன்னகைகளிலும் அவன் நினைவுகள்தான் ஒட்டி யிருக்கின்றன என்று சொன்னால் அவன் நம்புவானோ இல்லையோ, இதுதான் காதல் என்பதை நான் நம்புகிறேன்.*

*இரு உள்ளங்கள் மனதால் ஒன்று பட்டு, அன்பு என்னும் நூலினால் பின்னப்பட்ட இந்தக் காதல் என்பது மிக மிக இனிமையானது. இன்பமானது, அதை நான் முழுவதுமாக உணர்கிறேன். இதே காதல்தான் சமயத்தில் 'காதல் ஒரு போர் போன்றது' என்ற உணர்வையும் எனக்குத் தருகிறது.*

*–2.5.2007*

# காதலினால் அல்ல

*புள்ளிகளை மட்டுந்தான் எங்களால் போட முடிகிறது. எந்தெந்தப் புள்ளிகள் இணைந்து எந்த வடிவில் வாழ்க்கைக் கோலம் அமையப் போகின்றது என்பதை யாரும் முற்கூட்டியே உணர்ந்து கொள்வ தாகவோ அறிந்து கொள்வதாகவோ எனக்குத் தெரிய வில்லை.*

*நேற்றுத்தான் போலிருக்கிறது. நீ ஜேர்மனிக்கு வந்தது. நான்கு வருடங்களின் முன் வந்திருந்தாய். பார்த்துப் பேசும் பாக்கியம்தான் எனக்கில்லாமற் போய் விட்டது. பார்க்காமலே இருந்து விடுவோம் என்றாய். பால்யகாலத்து முகங்களையே மனங் களில் வார்த்திருப்போம் என்றாய்.*

*இன்றைக்கு ஏன் இதெல்லாம் என் நினைவில் வருகின்றன என்றே எனக்குத் தெரியவில்லை. இரவின் நிசப்தங்களைக் குலைக்கும் ஒவ்வொரு சப்தங்களும் எனக்குக் கேட்கின்றன. ஆழ்ந்து உறங்கிப் போகும் நான் ஏன் இப்படி அர்த்த ராத்திரியில் அர்த்தமற்று விழித்திருக்கிறேன்? புரிய வில்லை. மனசு குழம்புகிறது. எதையோ இழந்தது போலத் தவிக்கிறது. ´எனக்குப் பிரியமான யாருக்கும் ஏதாவது ஆகியிருக்குமோ..?´*

இருட்டுக்குள் நடந்து வரும் போது தூரத்தே தெரியும் வேப்பமரத்தில் ´பேய் இருக்குமோ!´ என்ற நினைவு வந்தவுடன் குடல் தெறிக்க ஓடும் சின்னப்பிள்ளை போல, கேள்வி தோன்றிய மாத்திரத்தில் மனசு சில்லிடுகிறது. ´வேண்டாம், எந்த அசம்பாவிதங்களும் வேண்டாம். இதற்கு மேல் யாரையும் இழக்கவோ, யாரும் எதையாவது இழந்து விட்டார்கள் என்று கேட்கவோ இந்த மனசுக்குத் திராணியில்லை.´ நினைவுகளிலிருந்து விலகி ஓடுகிறேன். வேப்பமரத்துக்குப் பயந்து ஓட, வளைவில் தெரியும் முடக்குக் காணிக்குள் விருட்சமாய் விரிந்திருக்கும் புளியமரம் மீண்டும் பேயை நினைவு படுத்துவது போல் எனக்குள்ளும் வேண்டாத நினைவுகள் வந்து என்னைப் பயமுறுத்துகின்றன. குடல்தெறிக்க ஓடுகிறேன்.

´இல்லை, யாருக்கும் ஒன்றும் நடந்து விடாது. எனக்கு நித்திரை வராததற்கான காரணம் வேறாக இருக்க வேண்டும்.´ இரவிலே உடற்பயிற்சி செய்வது அவ்வளவு நல்லதல்ல, என்று ராகினி பலதடவைகள் சொல்லியிருக்கிறாள். இருந்தும் வேலை முடிந்த பின் ரெட்மில்லரில் 45நிமிடங்கள் ஓடிவிட்டுத்தான் வீட்டுக்கு வந்தேன். அதனால்தான் நித்திரைகொள்ள முடியவில்லைப் போலும்.

என்னதான் சமாதானம் செய்தாலும், ஏனோ சில நாட்களாகவே மனம் குழம்பித்தான் இருக்கிறது. இன்று கொஞ்சம் அதிகப் படியாக. என்னவென்று புரியாத உணர்த்தல்கள். அடிக்கடிவிழிப்பு. படுத்ததும் தூங்கி விடும் என் இயல்பு நிலையில் இருந்து விலகியிருக்கிறேன். ஏதோ ஒரு யோசனை என்னை

அழுத்துகிறது. ஏன் இந்த உணர்வுகள் என்ற கேள்வி இந்தச் சில நாட்களுக்குள் பல தடவைகள் எனக்குள் எழுந்து விட்டது. ஆனாலும் ஐரோப்பிய அவசரங்க ளினூடு என் நாட்களும் விரைகின்றன.

ம்.. மீண்டும் நீ... ஏன் என் நினைவுகளில் வருகிறாய். மனத்திரையில் வலம் வரும் பலநூறு முகங்களுக்கு இடையில் நீ கொஞ்சம் அதிகமாகவே வருகிறாய் போலிருக்கிறது. அடிக்கடி வருகிறாய். இந்தச் சில நாட்களுக்குள் உன்னை இன்னும் அதிகமாகவே நினைக்கிறேன் போல இருக்கிறது. இரண்டு மூன்று நாட்களுக்கு முன் ஏதோ ஒரு உந்துதலில் உனது மகளுக்கு ஒரு மின்னஞ்சல் எழுதினேன். உனதும் உன் மனைவியினதும் புகைப்படம் ஒன்று எனக்கு அனுப்பும் படி. அவள் பதிலுக்காக இன்னும் என் மனம் காத்திருக்கிறது.

ஏனோ, உன்னைப் பார்க்க வேண்டும் போல மனதுள் ஆவல் எழுகிறது. மனங்களின் தொடுகை களைத்தவிர வேறெந்தத் தொடர்பும் இல்லாத தூரத்தில் நீ. உறவினன் என்பதையும் தாண்டிய ஏதோ ஒரு பிரியம் உன் மேல். எனக்கு உன் மேல் இருக்கும் பிரியத்தை விட உனக்கு என் மேல் இருக்கும் பிரியம் அதிகம் என்பதை நான்கு வருடங்களின் முன் நீ யேர்மனிக்கு வந்த போது, தொலைபேசியில் பேசிய போதுதான் உணர்ந்தேன். அப்போதும் கூட நாம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளவில்லை. தொலைபேசி என்ற ஒரு சாதனம் இருந்ததால் பேசிக் கொண்டோம்.

அன்று மிகச் சாதாரணப் பெண்கள் போலவே

*நூறில் ஒன்றாய், இல்லையில்லை ஆயிரத்தில் ஒன்றாய், அதை விடப் பொருத்தமாய் உலகத்தில் ஒன்றாய்... சமையல் முடித்து, சாப்பாடு முடித்து, கொஞ்சம் முன்னேற்றமாய், மினுக்கிக் கழுவி மினைக்கெடாமல் பாத்திரங்களை டிஸ்வோசரில் போட்டு விட்டு, துடைப்பத்துக்குப் பதிலாக வக்கும் கிளீனரை எடுத்த போதுதான் உனது தொலைபேசி என்னை அழைத்தது. யாராவது தொல்லை பேசுபவர்கள்தான் அழைக்கிறார்களோ என்ற யோசனையில் மனசுக்குள் சலனித்து விட்டுத்தான் எடுத்தேன்.*

*என்னை முழுமையாகச் சலனப்பட வைக்க என்றே கனடாவில் இருந்து வந்தாயோ! என்னமாய் பேசி விட்டாய்! மீண்டும் மீண்டுமாய் எனக்குள்ளே அவை ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. நினைவு களில் மிதக்கின்றன.*

*அதுக்காக காதல், கத்தரிக்காய் என்று விபரீதமாய் ஏதும் கற்பிதம் பண்ணி விடாதே. நான் இன்னொருத்தனின் மனைவி. நீ இன்னொருத்தியின் கணவன். சத்தியமாய் உன் மேல் எனக்குக் காதலில்லை. ஆனாலும் என்னைச் சலனப் படுத்து கிறாய். சற்றுச் சஞ்சலப் படுத்துகிறாய். ஒரு வேளை உன் காதலை அன்றே நீ சொல்லியிருந்தால் நானும் உன்னைக் காதலித்திருப்பேனோ, என்னவோ..!*

*எனக்கென்ன தெரியும்? நீ என்னைக் காதலித்தாய் என்று நான் எங்கு கண்டேன்? பனங்கூடல் தாண்டி, அப்பாவோடு நான் உன் வீட்டுக்கு வரும் போதெல்லாம், மச்சான் நீ என்றும்*

*உன்னை மணப்பது நான் என்றும் அப்பாச்சி சொல்லும் போதெல்லாம் எனக்கேதோ மரப்பாச்சி விளையாட்டுப் போலத்தான் இருக்கும்.*

*திருமணத்தின் அர்த்தமோ காதலின் சந்தமோ தெரியாத அந்த வயதில் அரைக் காற்சட்டைக்கு வெளியே அரைநாண் கயிறு எட்டிப் பார்க்க விளையாடிக் கொண்டிருக்கும் உன் மீது எனக்கு எந்த ஈடுபாடுமே வரவில்லை. காதல் மட்டும் எப்படி வரும்? அப்படியிருக்க அப்பாச்சியின் வார்த்தைகள் உன்னுள் ஆழப் பதிந்து போனதையும் நான் உனக்குத்தான் என்ற ஆசை உன்னுள் வேரூன்றி வளர்ந்து விட்டதையும் நான் எப்படி அறிவேன். ஒரு தரமாவது... நான் வளர்ந்த பின்னாவது நீ எனக்குச் சொல்லியிருக்கலாமே.*

*நான் பள்ளிக்கூடத்துக்குப் போகும் நேரங் களில் நீ சந்திக் கடையின் முன் ஒற்றைக்காலைத் தரையில் ஊன்றிய படி, மற்றக்கால் தொங்கிக் கொண்டு நிற்க சைக்கிளில் தவமிருந்தது எனக்காகத் தான் என்று நான் நினைக்கவேயில்லை. நீ சொன்ன போதுதான் நீ சந்தியில் நின்றதைப் பற்றியே நினைத்துப் பார்க்கிறேன்.*

*நீ கப்பலில் போய் விட்டாய் என்ற போது மாமியின் கஸ்டங்கள் தீர்ந்து விடும் என்று மனம் மகிழ்ந்தேனே தவிர வேறெந்த உணர்வும் எனக்கு வரவில்லை. நீ மட்டும் எப்படி உனக்குள் அப்படி யொரு கனவை வளர்த்துக் கொண்டு திரும்பி வந்தாய். அங்கிருந்தாவது உன் விருப்பத்தை,*

*ஆசையை, காதலை... சொல்லி ஒரு கடிதம் எழுதி யிருந்திருக்கலாமே!*

*ம், அதற்கு நான்தான் அவகாசம் தர வில்லையோ!*

*சில வருடங்கள் கழித்து, நீ கப்பலில் இருந்து திரும்பி வந்த அன்றே என்னைப் பார்க்க என்று ஓடி வந்ததாய் சொன்னாயே! அப்போது கூட "மாமி..." என்றுதானே கூப்பிட்டுக் கொண்டு வந்தாய். அம்மா மீது உனக்கு அத்தனை பாசம் என்றுதான் நினைத் தேனே தவிர, உன் வரவு எனக்குள் எந்த சந்தத்தையும் ஏற்படுத்தவில்லை. நான் என்பாட்டில் என் குழந்தையை மடியில் வைத்துப் பால்கொடுத்துக் கொண்டிருந்தேன். அந்தக் காட்சியில் உன் மனம் நொருங்கிப் போனதைக் கூட நீ யாருக்கும் அன்று சொல்லவில்லையே!*

*இத்தனை வருடங்கள் கழித்து, நான் பேரப்பிள்ளைகளையும் கண்ட பின் இதையெல்லாம் நீ என்னிடம் சொன்ன போது எனக்கு ஏதோ சினிமாப் படத்துக்கான கதையொன்றைக் கேட்பது போன்ற பிரமைதான் வந்தது. என்ன..? ஒரு வித்தியாசம். வழமையான கதைகளில் நான் வாசகியாய் அல்லது ரசிகையாய் இருப்பேன். இந்தக் கதையில் நானே கதாயநாயகியாய்...*

*நீ யேர்மனிக்கு வந்திருந்த போதும், நான் வர முடியாது போன அந்தக் குடும்பச் சந்திப்பில் ஒவ்வொரு அழைப்பு மணியின் போதும் நான்தான் வருகிறேன் என்று எதிர்பார்த்து ஏமாந்தாயாமே!*

*அங்கு வந்திருந்த உறவுகளில் சிலர் என்னிடம் பின்னர் சொன்ன போது நியமாகவே நான் வருந்தி னேன். வந்திருக்கலாமே என்று மனசுக்குள் ஆதங்கப் பட்டேன். ஆனாலும் ‘‘பார்க்காமலே இருந்து விடுவோம் என்றும் பால்ய காலத்து முகங்களையே மனதில் வார்த்திருப்போம்‘‘ என்றும் நீ சொல்லிச் சென்றதை நினைத்து மனத்தை ஆற்றிக் கொண்டேன்.*

*எனது 18வயதுக்குப் பிறகு உன்னைச் சந்தித்துக் கொண்டதாக எனக்கு ஞாபகம் இல்லை. எனது அந்த வயது முகத்தைத்தான் உனக்குத் தெரியும். அதே போல நான் கடைசியாகச் சந்தித்த உனது அந்த 23வயது முகத்தைத்தான் எனக்கும் தெரியும்.*

*இப்போதும் கூட உன் மனைவி வேலைக்கும், மகள் பாடசாலைக்கும் சென்ற பின்னான தனிமைப் பொழுதுகளில் நீ என்னைப் பற்றிய நினைவுகளில் மூழ்குவாய் என்று சொன்னாயே! அது அவ்வப் போதான தனிமைப்பொழுதுகளில் என் நினைவு களைச் சீண்டுவதை நான் உணர்கிறேன். அதற்காக எனக்கு உன்மேல் காதல் இருக்கிறது என்று மட்டும் நினைத்து விடாதே. இப்போதும் சொல்கிறேன், சத்தியமாக உன் மேல் எனக்குக் காதல் இல்லை.*

*ஆனாலும் வாழ்க்கை பற்றிய விடை கிடைக் காத சில பல கேள்விகள் என்னுள் எழுகின்றன. பெரியவர்கள் போட்ட புள்ளிகள் உன் மனதில் மட்டும் கனவுக் கோலமானது ஏன்? என்னை நீ நினைத்ததையும் என்னை நீ காதலித்ததையும்*

*உணராமலேயே நான் வேறொருவனைக் காதலித்து, கல்யாணம் செய்து... என்பாட்டில் வாழ்ந்திருக்கிறேனே! சின்ன உணர்த்தல்கள் கூட என்னிடம் இல்லாமற் போனது எப்படி?*

*மீண்டும் மீண்டுமாய் இந்த உன் பற்றிய நினைவுகள் ஏன் வருகின்றன என்று தெரியாமலே நான் தூங்கி விட்டேன் போலிருக்கிறது.*

*விடிந்த பொழுதிலும் மனசு குழம்பித்தான் இருக்கிறது. எனக்குப் பிரியமான யாருக்கும் ஏதாவது ஆகியிருக்குமோ? நினைக்கும் போதே வாயில் வைக்கக் கொண்டு போன உணவு நழுவி விழுந்து விடுகிறது. என் மேல் பிரியமான யாருக்காவது..? கேள்விகள் தோன்றுவதும் வழமை போலவே எனக்குள்ளேயே அமுங்கிப் போவதுமாய் பொழுது அவசரத்தோடு விரைகிறது.*

*வேலையிலும் மனதில் அமைதியில்லை. வீட்டுக்கு வேளைக்கே வந்து விடவேண்டும் போல மனசு அந்தரிக்கிறது. வந்து விட்டேன். அப்போது தான் அந்த அழைப்பு. நீ ஒரு மருத்துவமனையில் கடுமையான நோயில் வீழ்ந்திருக்கிறாய் என்ற செய்தியோடு.*

*ஒரு கணம் திக்குமுக்காடி விட்டேன். எப்படியாவது உன்னோடு பேசவேண்டும் என்று மனம்துடிக்கிறது. நன்றாகக் கதைத்துக்கொண்டுதான் இருக்கிறாய் என்றும் மருத்துவமனை என்பதால் இரவு பேசமுடியாது என்றும் காலையில் பேசும்படியும் சொல்கிறார்கள். சிறிது நேரத்தில் மருத்துவ*

*மனைக்கான தொலைபேசிஇலக்கத்தைத் தருகிறோம் என்கிறார்கள்.*

*மனசுக்குள் அலை புரள்கிறது. விழிகளில் நீர் திரள்கிறது. ஆனாலும் உன்னோடு பேசலாம் என்ற நம்பிக்கை என்னுள் பலமாக இருக்கிறது. அதிகம் காத்திருக்க வைக்காமல் தொலைபேசி அழைக்கிறது.*

*எடுத்த போது, எனது நம்பிக்கைகள் தவிடு பொடியாகின்றன. நீ போய் விட்டாயாம். அப்போது தான், அந்தச் சில நிமிடங்களுக்குள்தான், என்னோடு பேசாமலே போய் விட்டாயாம்.*

*சொன்னது போலவே பார்க்காமலே போய் விட்டாய்.*

*ஒப்பாரி வைத்து அழுகின்ற அளவுக்கு இப் போது நான் இல்லை. ஆனாலும் அவ்வப்போதான தேற்றுவார் இன்றிய தனிமைகளில் ஆற்றாமையில் கொட்டி விடுகிறது கண்ணீர்.*

*9.10.2007*

# யார் மனதில் யார் இருப்பார்..!

*பிரியமானவர்களோ அன்றில் முக்கியமான வர்களாக நாம் கருதுபவர்களோ எம்மைக் கண்டு கொள்ளாதிருப்பதை விட, எம் மேல் பிரியமானவர் களையோ அன்றில் எம்மை நேசிப்பவர்களையோ நாம் கண்டு கொள்ளாமலோ கருத்தில் கொள்ளா மலோ விட்டு விடுவது கவலைக்குரியது. அவர்களை மீண்டும் ஒரு முறை சந்திக்கும் வாய்ப்பு வாழ்வில் வந்து விடாமலே போய் விடலாம்.*

*அப்படித்தான் அவனும்! நினைவுகளில் மட்டும் அவ்வப்போது வந்து முகம் காட்டிப் போவான்.*

*அவனை நான் முதன் முறையாக மணியம் ரியூற்ரறியில்தான் பார்த்தேன். அது 1975ம் ஆண்டில் ஒரு நாள். அப்போது நான் க.பொ.த உயர்தரத்தில் படித்துக் கொண்டிருந்தேன். அன்று இரசாயனவியல் வகுப்பு முடிந்து, பிரயோககணித மாஸ்டருக்காக ரியூற்ரறியின் பின்புற முற்றத்தில் நாங்கள் காத்திருந் தோம். மாணவிகளுக்கென அந்த இடந்தான் ஒதுக் கப் பட்டிருந்தது. ஆண்மாணவர்கள் வழமை போல 'கேற்' றோடு கூடிய முன் முற்றத்தில் நின்றார்கள்.*

*சிரிப்பும், கதையும் என அவ்விடம் கலகலப்பா*

கவே இருந்தது. அப்போதுதான் பானுமதியை அவன் தூது விட்டிருந்தான். காதல் தூது.

பானு என்னருகில் வந்து "நிமிர்ந்து பார். அந்த யன்னலோடை நிற்கிறானே அவனைப் பார்" என்று குசுகுசுத்தாள். பார்த்தேன்.

யன்னல் கம்பிகளினூடு அவன் என்னையே பார்த்துக் கொண்டு நின்றான். வெள்ளையாக, மற்றவர்களிலிருந்து வித்தியாசமாகத் தெரிந்தான்.

அந்தப் பார்வையில் ஏதோ ஒரு எதிர்பார்ப்பு, ஏக்கம், இறைஞ்சல், காதல். சட்டெனத் தலையைத் தாழ்த்திக் கொண்டேன்.

"அவனுக்கென்ன இப்ப..?"

"அவனுக்கு உன்னிலை விருப்பமாம்"சொல்லச் சொன்னவன்'

"விருப்பமோ? "

ஏற்கெனவே ஒருத்தனை விரும்பியிருப்பதால் அப்போது நான் எனது வீட்டில் ஒரு குற்றவாளி யாகவே நடமாடிக் கொண்டிருந்தேன். "அவனை மறந்து விடு" என்பதுதான் அனேகமான பொழுது களில் எனது வீட்டில் ஒலிக்கும் திருமந்திரம். என்னோடு பேசும் போதெல்லாம் அம்மாவின் கண்கள் கரைந்து தாரை தாரையாக ஓடும். மூன்று தங்கைமாருக்கு அக்காவாக இருந்துகொண்டு எப்படி

*என்னால் காதலிக்க முடிந்தது, என்பது வீட்டில் யாருக்குமே புரியாத புதிர்.*

*நான் செய்து கொண்டிருக்கும் இம் மாபெரும் குற்றத்தால் எங்கள் வீடு ஒரு சோகவனமாக மாறிக் கொண்டிருந்தது. அம்மா அடிக்கடி சாப்பாட்டை மறந்து, கண்களை மேலே சொருகி யோசித்துக் கொண்டேயிருந்தா. அம்மம்மா, என்னைக் காணும் போதெல்லாம் அவனை மறந்து விடுவதாக தனது தலையலடித்துச் சத்தியம் செய்யச் சொல்லிக் கேட்டுத் திருப்திப்பட்டுக் கொண்டா. அப்பா, அவ்வப்போது தந்தியடித்து வரவழைக்கப் பட்டார். கடிதம் பரிமாறிய நாட்களில் செய்தி கிடைத்து அண்ணன் என் மண்டை பிளக்காத குறையாகக் குட்டினான். எங்கு போனாலும் துணைக்குத் தம்பி கூடவே வந்தான். வீட்டுக்கு வெளியிலே வந்தால் ஊரவர்கள் ‘‘பதின்னாலு, பதினைஞ்சு வயசிலை காதல் ஒரு கேடோ‘‘ என்பது போலப் பார்த்தார்கள். நண்பர்கள், பாடசாலைத் தோழிகள் கூட ‘‘மறந்து விடு‘‘ என்று புத்திமதி சொன்னார்கள்.*

*இந்த நிலையில் இன்னொரு காதல் தூதா?*

*மீண்டும் பார்த்தேன். அவன் என்னையே பார்த்துக் கொண்டு நின்றான். சிவந்த அழகான உதடுகள். ஊடுருவிப் பார்க்கும் கண்கள். அழகாகத் தான் இருந்தான். ஆனாலும் ஏனோ அவன் மேல் எனக்கு எந்த ஈடுபாடும் வரவேயில்லை.*

*அதன் பின்னும் சில தடவைகள் தூதுகள் வந்தன. என்னால் அவனை விரும்பவே முடிய*

வில்லை. அவன் என்ன படிக்கிறான் என்றோ அவனுக்கு என்ன பெயரென்றோ கூட நான் அறிய முனையவில்லை. அப்படியே காலங்கள் கரைந்தன. என் தோழிகள் இன்னும் படித்துக் கொண்டே இருக்க நான் காதலித்தவனையே திருமணம் செய்து மூன்று குழந்தைகளுக்குத் தாயாகியும் இருந்தேன். எனது உலகம் குழந்தைகள், கணவர் என்ற வட்டத்துக்குள் குறுகிப் போயிருந்தது.

அப்போதுதான் எனது மைத்துனர்கள் எல்லோரும் வெளிநாடு சென்று விட எனது புகுந்த வீட்டில் எனது மாமிக்குத் துணையாக மாமியோடு போய் வாழ வேண்டிய தேவை வந்தது.

போய், சில நாட்களிலேயே அந்த அவனின் தரிசனம் எனக்குக் கிடைத்தது. கையில் ஓரிரு கொப்பி, புத்தகங்களுடன் அவன் அவ்வப்போது சைக்கிளில் மாமி வீட்டைத் தாண்டிப் போவான். மாமி வீட்டிலிருந்து நான்கைந்து வீடுகள் தள்ளித்தான் அவன் இருந்தான். மாமி குடும்பத்துக்கு கொஞ்சம் சொந்தமாகவும் இருந்தான். மாமி அவனைப் பார்த்துச் சிரிப்பா. ஓரிரு கதைகள் அவனோடு கதைப்பா. எப்போதோ ஒரு நாள் எனக்குக் காதல் தூது அனுப்பியவன் என்ற நினைவு உள்ளிருந்தாலும் நான் எந்த உணர்வையும் வெளி யில் காட்டிக் கொள்வதில்லை. மருந்துக்குக் கூட அவனைப் பார்த்துச் சிரிப்பதுவுமில்லை. பேசாமல் ஓரமாய் நின்றிருப்பேன். விழிகள் மட்டும் எப்போ தாவது எதேச்சையாக மோதிக் கொள்ளும்.

பிறத்தி ஆண்களைப் பார்த்துச் சிரிக்கக்

கூடாது என்ற எச்சரிக்கை உணர்வு அப்போது எல்லாப் பெண்களிடமும் இருந்திருக்கும். அதுதான் நான் ஒரு தடவை கூட அவனைப் பார்த்து ஒரு புன்முறுவல் கூட பூக்காது விட்டதற்கான காரண மாக இருக்கலாம்.

காலம் எது பற்றியும் யோசிப்பதில்லை. அது தன்பாட்டில் ஓடிக் கொண்டேயிருந்தது. எனது மகள் கிண்டர்கார்டின் போகத் தொடங்கினாள். பெரும்பாலான நாட்களில் மகளைக் கிண்டர் கார்டனில் இருந்து கூட்டிவர நான் தான் சமைத்த குறையிலே சேலையைச் சுற்றிக் கொண்டு ஓடிப் போக வேண்டியிருக்கும். கிராமக்கோட்டு வைரவர் கோயிலடியில் இருந்து கிராமக்கோட்டுச் சந்தி தாண்டி, வடமாராட்சிப் பாடசாலை ஒழுங்கை வரை நடந்து போய் அவளைக் கூட்டி வருவதற்கிடையில் நிறையப் பேரையும் நிறைய விடயங்களையும் வழி வழியே காண்பேன்.

வைரவர் கோவிலில் மணி கிணுகிணுக்கும். வாசலிலோ அன்றில் கோயிலின் முன் முற்றத்தில் விறாந்தையை ஒட்டியோ கற்பூரம் எரிந்து கொண்டிருக்கும். யாராவது கும்பிட்டுக் கொண்டிருப் பார்கள். அல்லது சப்பாணியில் தியானத்தில் இருப்பார்கள். இரத்தினக்காவோ, கமலாக்காவோ, லலியக்காவோ தத்தமது வீட்டு வாசல்களில் நின்று என்னைக் குசலம் விசாரிப்பார்கள். பாலாம்பிகை யக்கா வீதியைக் கடந்து எங்காவது போய்க் கொண் டிருப்பா. பேரூந்து, சைக்கிள்கள் என்று எதிரும் புதிரு மாக வாகனங்கள் விரையும். கிராமக்கோட்டுச் சந்தியில் இருக்கும் பெரியகல்லில் பெரும்பாலும்

*சாராயக் கடை துரைசிங்கத்தின் மகன் பொடி அமர்ந்திருப்பான். பலர் சந்தியில் குறுக்கும் நெடுக்குமாக விரைந்து கொண்டேயிருப்பார்கள். இத்தனை களேபரங்களுக்கும் நடுவில் எப்போதும் அவனும் வருவான்.*

*எதிர்ப்புறத்திலிருந்து சைக்கிளில் வருவான். அவன் கையில் உள்ள புத்தகமோ, கொப்பியோ அவன் படிக்கிறான் என்றே என்னை எண்ண வைக்கும். ஒரு சில சமயங்களில் அவன் என்னைத் தாண்டும் பொழுது விழிகள் ஒரு கணம், ஒரேயொரு கணம் மோதிக் கொள்ளும்.*

*அவன் எதேச்சையாகத்தான் ஒவ்வொரு முறையும் வந்தானா அல்லது நான் மகளைக் கூட்டப் போகும் நேரம் பார்த்து வந்தானா என்பது எனக்கு இன்றுவரை தெரியாது. ஆனால் அவன் கண்டிப்பாக வருவான், என்னைத் தாண்டிப் போவான் என்பது மட்டும் ஒரு கட்டத்துக்குப் பிறகு எனக்குத் தெரிந்திருந்தது.*

*தொடர்ந்த காலங்களில் போர், புலம்பெயர்வு என்று வாழ்க்கையே மாறிப் போனது. அப்போ தெல்லாம் அவன் என் நினைவில் வந்தானா இல்லையா என்பதே நினைவில் இல்லை.*

*வருடங்கள் கிட்டத்தட்ட 2இருபதுக்கு மேல் ஓடிய பின், ஒரு நாள் இலண்டனில் இருக்கும் எனது தங்கையுடன் தொலைபேசியில் பல விதமான கதைகளையும் கதைத்துக் கொண்டிருந்தேன். அப் போது தான் "எங்கட ஊர்தான், நான் முந்தியிருந்த*

*இடத்திலை எனது பிளாற்றிலை, பக்கத்து றூமிலை தான் ஒருவன் இருந்தவன். மாமிக்குச் சொந்தமாம். திடீரென்று செத்திட்டானாம்‘‘ என்றாள் தங்கை.*

*யாரென நான் துருவித் துருவி விசாரித்த போது தான் அது அவன் என்று தெரிய வந்தது. மனம் ஒரு முறை துணுக்குற்றது. அவன் திருமணமே செய்து கொள்ளவில்லையாம்.*

*ஏன்..?*

*அதன் பின் சிலகாலம் அவனைப் பற்றிய நினைவுகள் என்னுள் ஓடிக் கொண்டேயிருந்தன. ஏன், ஒரு தரம் கூட நான் அவனுடனோ அல்லது அவன் என்னுடனோ பேசவேயில்லை என்ற கேள்வி எனக்குள் எழுந்து கொண்டேயிருந்தது. ஒரு சகோதரன் போல நினைத்தாவது பேசியிருக்கலாமே! அல்லது ஒரு நண்பன் என்ற ரீதியிலாவது அவனைப் பார்த்துப் புன்னகைத்திருக்கலாமே!*

*மனசு அங்கலாய்த்தது.*

*காலம் ஓடிக் கொண்டேயிருக்கிறது. அவனை என் நினைவுகளிலிருந்து அத்தனை சுலபமாகத் தூக்கியெறிந்து விட முடியவில்லை. எப்போதும் இல்லாவிட்டாலும், அவ்வப்போது அவன் என் நினைவுகளில் வந்து போய்க் கொண்டுதான் இருக்கிறான்*

*–19.01.2015*

# உன்னைக் கண்டு நானாட...

*அன்றிரவு சப்பல் அடி. பூவரசந்தடியா, கிளிசரியாத்தடியா அல்லது வாதநாரயணித்தடியா என்பது ஞாபகத்தில் இல்லை. மெல்லிய சுள்ளிப் பச்சைத்தடி. அம்மா முதலில் ஆத்திரம் தீரு மட்டும் விளாசித் தள்ளி விட்டா. பின்னர் என்னை அடித்ததற்காகவும் நான் காதலிப்பதற்காகவும் அழுது கொண்டிருந்தா. நான் அடியின் வலியை விட அம்மாவின் அழுகையைத் தாங்க முடியாது அழுது கொண்டிருந்தேன்.*

*அது அர்த்த ஜாமம். அண்ணா, தம்பிமார், தங்கைமார் எல்லோரும் தூங்கி விட்டார்கள். அப்பா களனியா புகையிரதநிலையத்தில் கடமையில். பெத்தம்மா(அம்மாவின் அம்மா) மட்டும் அம்மாவுக்குத் துணையாக அல்லது என் காதலை மறக்கப் பண்ணுவதற்காக அங்கிருந்தா.*

*பெத்தம்மா, பாட்டாவும் நித்திரையாகிய பின் அவருக்கு இந்த விசயத்தைப் பற்றி எதுவுமே சொல்லாமல் வந்திருந்தா. அவவின் வீடு எங்கள் வீட்டின் பின்னால்தான் இருக்கிறது. பெத்தம்மா வந்த பின் அம்மா அடிக்கவில்லை.*

*“கடிதங்கள் வைத்திருந்தால் கொணர்ந்து*

*இந்த அடுப்புக்குள் போட்டு விட்டு, அவனது நினைவுகளையும் அத்தோடு கருக்கி விடு‘‘ என்று மண்றாடிக் கொண்டே இருந்தா. குசினிக்குள்தான் அந்த நாடகம் நடந்து கொண்டிருந்தது. அந்தப் பெரிய வீட்டில், குசினியை ஏன் அம்மா தேர்ந்தெடுத்தா என்பது பற்றியும் நான் எதுவும் சிந்திக்கவில்லை.*

*அது அம்மாவுக்கு நான் பொய் சொல்லத் தொடங்கிய வயது. எனது இரசாயனக்கொப்பிக்குள் அந்தக் கடிதம் இருந்தது.*

***வானில் முழு மதியைக் கண்டேன்***
***வனத்தில் ஒரு பெண்ணைக் கண்டேன்***
***வான முழுமதியைப் போலே***
***மங்கையவள் வதனம் கண்டேன்...***

*என்ற பாடல் வரிகளும் அதில் இருந்தன.*

*ஆனால் என்னிடம் எந்தக் கடிதமும் இல்லை என்று பச்சைப் பொய் சொன்னேன். கொப்பிக்கு ஏதா பத்திரிகையின் நடுப்பக்கத்தைக் கவராகப் போட்டிருந்தேன். அதற்குள்தான் கடிதம் இருந்தது. அதனால் அம்மா கண்டு பிடிக்க மாட்டா என்ற அசாதரணத் துணிச்சல்.*

*பெத்தம்மா மிகவும் அன்பாகவும் வாஞ்சை யுடனும் கதைத்தா. எனக்கு மூன்று தங்கைமார் இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டினா. எங்கள் குடும்ப மானம் கப்பலேறி விடப் போகிறது என்று அழாக் குறையாகச் சொன்னா. ‘‘மறந்து விடு‘‘ என்று கெஞ்சினா. கொண்டு வந்த கற்பூரத்தட்டைப்*

*பற்ற வைத்து 'இனி அவனைப் பார்க்கவோ, பேசவோ மாட்டேன்' என்று சத்தியம் செய்யச் சொன்னா. கொஞ்ச நேரம் போக தன் தலையில் அடித்துச் சத்தியம் செய்யச் சொன்னா. சத்தியத்தை மீறினால் தான் செத்து விடுவேன் என்றா.*

***உன்னைக் கண்டு நானாட***
***என்னைக் கண்டு நீயாட***
***உல்லாசம் பொங்கும் இன்பத் தீபாவளி***

*என்று அவன் வாழ்த்திய வாழ்த்து மடல் வீட்டுக்கு அஞ்சலில் வந்ததில் இருந்து ஆரம்பித்த பூகம்பம்.*

*அதிலும்*
***என்னைக் கண்டு நீயாட...*** *என்ற வரி,*

*'அவனைக் கண்டு நீயும் ஆடுகிறாயா..?' என்ற கேள்வியாக வீட்டில் எல்லோரையும் உறுத்திக் கொண்டே இருந்தது. அதனால் அவர்கள் கோபமாகவும் வேதனையாகவும் என்னைக் கடந்து கொண்டும் கண்கொத்திப் பாம்பாய் கவனித்துக் கொண்டும் திரிந்தார்கள்.*

*அன்றைய இரவு என் மனம் போராடிக் கொண்டே இருந்தது. 'அவனை மறக்க முடியுமா' என்று தெரியாமல் இருந்தது.*

*காலையில் சாப்பிடும் போது இருந்து சாப்பிட்டால் வெள்ளைச்சட்டையின் பிளீற்ஸ் குளம்பி விடும் என்பதால் நின்ற படி சாப்பிட்டேன்.*

அம்மா கனக்கச் சொல்லிக் கொண்டே இருந்தா. பேசினா. தங்கைமாரை நினைக்கச் சொன்னா.

கேற்றைத் திறந்து படியில் இறங்கக் கால் வைக்கும் போது மனதுக்குள் சங்கற்பம் பூண்டேன்.

'இனி அவனைப் பார்ப்பதில்லை. அவன் எது கேட்டாலும், என்ன எழுதினாலும் பதில் கொடுப்ப தில்லை. அவனை மறந்து விட வேண்டும்'

காலை வீதியில் வைத்தேனோ, இல்லையோ தெரியவில்லை. என் முன்னே சைக்கிள். மெதுவாக என்னைத் தாண்டியது. அவன்தான். அவனேதான். ஒரு கணந்தான். பார்வைகள் மோதிக் கொண்டன. எனக்குள்ளே என்னவோ பாய்ந்தது. வயிற்றுக்குள் பட்டாம் பூச்சி பறந்தது. கலங்கியிருந்த கண்கள் கவலைகளை மறந்தன. மனம் துள்ளியது. இன்ன தென்று சொல்ல முடியாத வார்த்தைகளற்ற உணர்வு அது.

அவன் போய் விட்டான். எனது சங்கற்பம், மனோதிடம் எல்லாம் அவனோடு கூடப் போய் விட்டன. சுற்றிக் கொண்டு ஏதாவது ஒரு வழியால் திரும்ப வருகிறானா என்று வழி வழியே திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போனேன். அப்போது அவன் வரவில்லை.

ஆனால் பாடசாலைக்கு ஒரு பெண் மூலம் ஒரு கொப்பி வந்தது. கொப்பியின் உள்ளே இரு பக்கங்கள் ஒட்டப்பட்டு அதற்குள் கடிதம் இருந்தது.

***கரைபோட முடியாத புது வெள்ளையாடை***
***கலைமானும் அறியாத விழி வண்ண யாடை..***
*என்ற பாடல் வரிகளுடன்.*

*எனது மனவுறுதி தவிடு பொடியானது. நான் அவனது அந்தக் கடிதத்துக்குப் பதில் எழுதத் தொடங்கினேன்.*

*–18.10.2017*

*வாழ்வில் யார் யாரை எந்தெந்தப் பொழுதுகளில் சந்திக்கப் போகிறோம் என்பதையோ, அவர்களில் யார் யார் எமக்குப் பிடித்தமானவர்களாகி விடப் போகிறார்கள் என்பதையோ எம்மில் யாருமே முற்கூட்டியே அறிந்து வைத்திருப்பதில்லை.*

*ஏன், எதற்கு, எப்படி என்று தெரியாமலே நாம் சந்திப்பவர்களில் சிலர் மட்டும் எம் நெஞ்சங்களில் பிரத்தியேகமான இடத்தைப் பிடித்து விடுகிறார்கள்.*

*அப்படித்தான் இவர்களில் சிலர். என்னுள் குடி புகுந்து, என் மனமுகட்டில் அமர்ந்திருக்கிறார்கள்.*

***சந்திரவதனா செல்வகுமாரன்***

*MANAOSAI*

*Chandra Selvakumaran*
*chandra1200@gmail.com*

